Regd No. M. 4739.

விலை முக்காலணா

விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 8. சென்னை, ஆகஸ்டு 1, 1946. இதழ் 49

போராட்டத்திற்கு காங்கிரஸின் இரகசிய ஏற்பாடு?

லீக் முடிவுபற்றி ஜின்னா விளக்கம்

பம்பாய், ஜூலை 31—

லீக் முடிவுபற்றி ஜனாப் ஜின்னா பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் பின் வருமாறு கூறினார்:—

'எங்களால் முடிந்ததைச் செய்துவிட்டோம். இனி, அடுத்தபடியாக முதலில் தொடங்கவேண்டியபொறுப்பு ஸர்க்காரையாவது காங்கிரஸையாவது சார்ந்தது நாங்கள் எவர்மீதும் போர் தொடுக்கவில்லை. நாங்கள் அழிந்துபோகாம லிருப்பதற்காகவும் இனி என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதையே முஸ்லிம் லீக் கூட்டம் தீர்மானித்திருக்கிறது.

நேரடியான போராட்டம் எந்த முறையில் நடத்தப்படும் என்பதைப் பற்றி இச்சமயம் எதுவும் கூறமாட்டேன்.

பிரிட்டிஷ் சர்க்காரும் காங்கிரசும் அவரவர் முறைப்படி போராட்டத்திற்கு ஆயத்தமயிருக்கின்றனர் பிரிட்டிஷ் சர்க்கார் துப்பாக்கிசனிகம்தயாராயிருக்கிறது. காங்கிரசார் பொது மக்கள் கிளர்ச்சியும் போராட்டமும் நடத்துவதற்காகஆயத்தமாயிருக்கின்றனர். 1942ம் ஆண்டுப் போராட்டத்தைவிட அதிக கோரமான போராட்டத்தை நடத்துவதற்கு, காங்கிரஸ் வெகு மும்முரமான ஏற்பாடுகளைச்செய்துகொண்டிருக்கிறது இதற்காகக் காங்கிரஸ்காரருக்கு இரகசிய உத்தரவுகள் போயிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். இந்தியத்தேசிய இராணுவ (ஐ. என். ஏ.)த்தைச் சேர்ந்தவர்களின் உதவியும் இவ்விஷயத்தில் காங்கிரசாரால் கோரப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில்பாக்கிஸ்தான் பெறுவதற்காக வேண்டி, முஸ்லிம் லீகும் தன்னை வலுப்படுத்திக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது."

மதுரையில் துணிப்பங்கீடு

மதுரை, ஜூலை. 30—

அரிசி ரேஷன் கார்டுகளை சில்லறைத் துணி வியாபாரிகளிடம் காட்டி, அடையாளச்சீட்டுகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அப்பேர்ப்பட்டவர்களுக்கே மில்துணி விலைக்குக் கொடுக்கப்படுமென்றும், இந்த ஏற்பாடு ஆகஸ்ட் 5-ந் தேதி முதல் மதுரையில் அமுலுக்கு வருமென்றும், மதுரை ஜவுளி வர்த்தகர் சங்கத் தலைவர் அறிவிக்கிறார்.

மதுரை உதவி டெக்ஸ்டைல் கமிஷனரின் சம்மதத்தின் பேரிலேயே இம்முடிவு செய்யப்பட்டிருப்பதாகத்தெரிகிறது.

மேல் சட்டசபையில் பட்ஜட்

குதிரைப் பந்தய வருமானம் வெளியாயிற்று

சென்னை, ஜூலை 31—

சென்னை மேல் சட்டசபை (கவுன்சில்) இன்று மாலை 3 மணிக்கு தலைவர் தோழர் ஆர். பி. ராமகிருஷ்ண ராஜு தலைமையில் கூடியது.

கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட்டன.

கிண்டி குதிரைப் பந்தயத்தின் மூலமாக சர்க்காருக்குக் கிடைத்துவரும் வருட வருமானம் எவ்வளவென்று தோழர்அப்துல் லத்திப் புருக்கி கேட்டார். கடந்த மூன்றாண்டுகளில் கீழ்க்கண்ட விதத்தில் வருமானங்கிடைத்ததென்று ரெவினியு மந்திரி தோழர் கரந்த் தெரிவித்தார்.

1943-44	ரூ.	6 69	லட்சம்
1944 45	ரூ.	10.53	,,
1945-46	ரூ	18.26	,,

பட்ஜெட்டைப் பற்றிய பொது விவாதம் ஆகஸ்ட் 6 7, 8 தேதிகளில் நடைபெறுமென்று மேல் சபைத் தலைவர் அறிவித்தார்.

ஓராண்டிக்குள் கோவில் நுழைவாம்

ராமனாதபுரம், ஜூலை 26—

முன்னேற்ற இலாகா மந்திரி தோழர் கூர்மையா "ராமனாதபுரம் ஜில்லா ஹரிஜன் மகாநாட்டில்" பேசுகையில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதுவரையில் ஒரு சில கோவில்கள் மட்டுமே திறந்துவிடப்பட்டிருப்பதைக்குறித்து வருந்துவதாகத் தெரிவித்தார்.

இம்மகாணத்திலுள்ள கோவில்கள் அனைத்தும்இன்னும் ஓராண்டுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் திறந்துவிடப்படுமென்றும் கூறினார்.

ஜாவாவிலிருந்து அரிசி

கிழக்கிந்திய சர்க்கார் குறுக்கீடு

பட்டேவிய, ஜூலை, 30—

இந்தியாவுக்கு அரிசி அனுப்புவது சம்பந்தமாக இந்தோனேஷிய குடியரசுப் பிரதமர் டாக்டர் ஷாரிருக்கும் இந்திய சர்க்கார் பிரதிநிதி தோழர் கே. எல். பஞ்சாபிக்குமிடையே நிறைவேறியிருக்கும் ஒப்பந்தம் நெதர்லாந்து கிழக்கிந்திய சர்க்காரின் ஆமோதிப்பை இன்னும் பெறவில்லையென் டச் கிழக்கிந்திய சர்க்காரின் அறிக்கையொன்று கூறுகிறது. டி ஒப்பந்தத்தில் இந்தியாவுக்குத் தரும் நெல்லின் விலை (220 பௌண்ட் கொண்ட) மூட்டையொன்றுக்கு ரூ 10—14—4

தாய்மொழி மூலம் கல்வி

சட்ட சபையில் கேள்விகள்

சென்னை, ஜூலை, 31—

இவ்வாண்டிற்குரிய பட்ஜட்டை விவாதிக்க இன்று கூடிய சென்னை சட்டசபைக் கூட்ட நடவடிக்கைகள் ருசிகரமாகவிருந்தன. பாடசாலைகளில் தாய் மொழி மூலம் கல்வி போதிப்பது, வியாபார வரி வசூலிப்பது முதலிய விஷயங்கள் பற்றி பல கேள்விகள் கேட்கப்பட்டன. பெருவாரியான உறுப்பினர்கள் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

பட்ஜட் சமர்ப்பிப்பதை ஒத்திவைக்க வேண்டுமென நேற்று கட்சிக் கூட்டத்தில் தோழர் வைத்தியநாதய்யர் கொண்டு வந்த தீர்மானத்தை பிரதமர் நிராகரித்ததை மீண்டும் பரிசிலனை செய்ய வேண்டுமென தீவிரமாக உறுப்பினர்களிடையே பேசிக்கொள்ளப்பட்டது. சட்டசபை உறுப்பினரின் சுதந்தரத்தைப் பறிக்கக் கூடிய நிலையிலுள்ளது பிரதமரின் போக்கு என்றும் பேசப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு சாரினர் (சி. ஆர். கோஷ்டியினர்) மந்திரி சபை மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவர தீவிரமாக முயன்று வருவதாகவும் வதந்தி உலவி வருகிறது உறுப்பினர்களிடையே.

கல்வி முறை பற்றி 'சரமாரி' கேள்விகள்

சர்க்காரின் கல்வி முறையைப்பற்றி சட்டசபை உறுப்பினர்கள் பலர் சரமாரியான கேள்விகள் கேட்டனர், கல்வி மந்திரி பம்பாய்க்குச் சென்றிருக்கிறாராகையால், அவரது பார்லிமென்டரி காரியதரிசியே திணறவைக்கப் பட்டார். சட்டசபைத் தலைவரும் இடையிடையே அவருக்கு உதவி புரிந்தார். கல்வி முறையைத் திருத்தியமைப்பது குறித்து சர்க்கார் யோசித்து வருகின்றனரா வென்று ஒரு கேள்வியெழுந்தது. காரியதரிசி "ஆம்" என்று பதிலுரைத்தார். பாடங்களைத் தாய் மொழிமூலம் போதிப்பது குறித்து மந்திரிகள் பேசிவந்தார்களே அது என்னவாயிற்றென்று தோழர் அப்துல் அமிக்கான் கேட்டார். தலைவர் குறுக்கிட்டு "இத்தகைய கேள்விகளை அவரைக் கேட்கக்கூடாது. காரியதரிசி வேலைக்குப் புதியவராவார்" என்றுகூறினார்.

சட்டசபை உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் கல்வி முறையில் எத்தகைய மாறுதலும் செய்யப்படமாட்டாதென உறுதியளிக்க முடியுமாவென உறுப்பினரொருவர் கேட்டதற்கு அத்தகைய உறுதி மொழி யெதுவும் தரமுடியாதென்ன பிரதமர் பதிலளித்தார்.

மண்டலத் தாய் மொழிகள் மூலம் பாடங்களைப்போதிப்பதால் மாகாணத்திலுள்ள பல திறப்பட்ட கலாச்சாரங்கள் பாதிக்கப்படமாட்டாவாவென்று தோழர் அமீத்கான் கேட்டதற்கு, இம் முழுப்பிரச்னையும் இறுதியில் எடுத்துக் கொள்ளப்படுமென பிரதமர் தெரிவித்தார். இன்னொரு கேள்விக்கு பதிலளிக்கையில், மண்டல மொழிகள் மூலம் கல்வி போதிப்பதைப்பற்றிய சர்க்கார் கொள்கை இன்னும் முற்றிலும் உருப்பெறவில்லையென பிரதமர் கூறினார்.

சட்டசபை ...

கல்லூரியில் மட்டும் இங்கிலீஷ் படிப்போம்

கல்விமாநாட்டில் காந்தியார்

பூனா, ஜூலை. 30—

இங்கு நடைபெற்ற கல்வி மாநாட்டில் தோழர் காந்தியார் பேசும்போது, மக்கள் வாழ்க்கையில் இங்கிலீஷ் இடம் பெறுதல் கூடாதென்றும், ஆனால் பல்கலைக் கழகத்தில் மட்டும் இங்கிலீஷை வைத்துக்கொள்ளலாமென்றும், காரணம் அது சர்வதேச மொழியாகி விட்டதென்றும் குறிப்பிட்டார்.

பாலஸ்தீனம் நான்கு துண்டாகும்

லண்டன், ஜூலை 31—

பாலஸ்தீனத்தில் யூதர் - அராபியர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காக பிரிட்டிஷ் நிபுணர்களும் அமெரிக்க நிபுணர்களும் கூடி ஒரு முடிவுக்கு வந்து விட்டனர்.

இதன்படி பாலஸ்தீனம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படும். அராபியர் மாகாணம், யூதர் மாகாணம், ஜெரூசலம் ஜில்லா, நெகேப் ஜில்லா- என நான்காகத் துண்டு போடப்படும்.

யூதர்கள் ஏற்கனவே மிகுதியாகத் தங்கியுள்ள இடமும் இதர சிறு பகுதிகளும் சேர்ந்து யூதர் மாகாணமாகும்.

ஜெரூசலம், பெத்தலேஜ் ஆகிய இரண்டும், இவைகளைச் சுற்றியுள்ள ஊர்களும் சேர்ந்து ஜெரூசலம் ஜில்லாவாகும். தெற்கு பாலஸ்தீனத்தில் விளைபூமிகளின் எல்லைக்கு அப்பாலுள்ள பகுதி நெகேப் ஜில்லாவாகும்.

பாலஸ்தீனத்திலுள்ள இதர பகுதிகள் அத்தனையும் அராபியர் மாகாணமாகும். இம்மாகாணங்களுக்குத் தனித் தனி சட்டசபை இருக்கும்.

ஆனால், வெளிநாட்டு விவகாரம், தற்காப்பு, சுங்கம், கலால் ஆகிய இலாகாக்கள் மத்திய ஸர்க்கார் வசம் இருக்கும்.

அரிசிரேஷன் 8 அவுன்ஸாயிற்று

சென்னை, ஜூலை 31—

அரிசிப் பங்கீட்டை ஆளொன்றுக்கு 8 அவுன்ஸாகக் குறைக்க முடிவு செய்யப் பட்டுள்ளதென முதன் மந்திரி இன்று சட்டசபையில் தெரிவித்தார். (8 அவுன்ஸ் அரிசி; 4 அவுன்ஸ் கோதுமை அல்லது இதர தானியங்கள்.)

ஆகஸ்டு 4-ந் தேதியிலிருந்து இம்முறை அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்றும், இல்லாவிடில் மாகாண நிலை கேவலமாகி விடுமென்றும் பிரதமர் தெரிவித்தார். காலப் போக்கில் நிலை சீர்படுமேயானால், பங்கீடு அதிகப்படுத்தப்படுமென்றும் அறிவித்தார்.

ரயில்வேத் தொழிலாளருக்கு

சம்பளம் உயர்ந்தது

சென்னை, ஜூலை 31—

ரயில்வேத் தொழிலாளர்கட்கு இடைக்கால நிவாரணை அளிப்பது பற்றி சம்மேளனத்தினரின் ஆலோசனைக் கமிட்டி கூறியிருந்த யோசனைகளை ரயில்வேபோர்டு ஏற்றுக்கொண்டது. இவ்வேற்பாட்டின்படி ரூ. 250 வரை சம்பளம் வாங்குவோருக்கு மாதம் ரூ 4—8—0 வீதம் 1946 ஜூலை முதல் அதிக சம்பளம் கூட்டிக்கொடுக்கப்படும். இச்சம்பள உயர்வு செப்டெம்பரில் கிடைக்கும். ரயில்வே ...

"விடுதலை"

சென்னை 1—8—'46 வியாழக்கிழமை

100-க்கு 70-மார்க்!

1946—47-ன் மாகாண வரவு செலவுத் திட்டம் (பட்ஜெட்) நேற்று, முதன் மந்திரியாரால் சட்டசபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

தோழர் ஆச்சாரியாரைச் சேர்ந்தவர்கள் இந்த பட்ஜெட், "சுத்த பூஜ்யம்! படுமோசம்! மிகவும் பிற்போக்கானது," என்று கூறி விடலாம். மந்திரி சபையைச் சேர்ந்தவர்கள், 'என்ன பேஷான பட்ஜெட்? இதைவிடச் சிறந்த ஒன்றை எந்த நிபுணராலும் அமைக்க முடியாது", என்று கூறலாம்.

முதலாவது, புதிய வரி எதுவும் போடாமல் இந்த பட்ஜெட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. உணவுப் பஞ்சம் சம்பந்தமாகப் பிற்காலத்தில் அதிகமான செலவினங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவித்து, நியாய விலைக்கு மக்களுக்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பு இன்னும் சில ஆண்டுகளுக்கேனும் இருந்து தான் தீரும். உணவுக்குறைவை நிரந்தரமாகப் போக்கவேண்டுமானால், பெரியபெரிய நீர்ப்பாசன வேலைகளைச்செய்ய வேண்டும். இதைவிட முக்கியமானது வேறெதுவுமே இருக்கமுடியாது. இதற்கு 295 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது போதவே போதாது. தென் இந்தியாவில் சாகுபடிமே ஆகாத தரிசு நிலங்கள் பல்லயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. இவைகளை விளைநிலங்களாக்குவதென்றால், நீர்ப்பாசனத்திற்கு இப்போது ஒதுக்கப்பட்டதைவிட இன்னொரு மடங்காவது இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

புதிய வரிகளைப் போடுவதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் இனி எப்போது கிடைக்கப்போகிறதோ, தெரியவில்லை. பணப்பெருக்கம் மிகுந்திருக்கும் இந்த நேரத்தில், பணம்பெருத்தவர்களிடமிருந்து அதிகமான வரியை வசூல் செய்திருக்க வேண்டியது முன்யோசனையுள்ள ஓர் ஆட்சியின் முதற் கடமை. உதாரணமாக, விற்பனை வரியை ரூபாய்க்கு மூன்றணா வரையில்கூட உயர்த்தி, அந்தவரியைமொத்தவியாபாரிகளிடமிருந்தும், பெரிய சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் வசூல் செய்திருக்கலாம்.

என்றாலும் ரோடுகளுக்காக வென்று அட்வைஸர் ஆட்சியால் ஒதுக்கப்பட்டிருந்த அதிகத்தொகையின் ஒரு பகுதியை நீர்ப்பாசனத்துக்கு ஒதுக்கியது போற்றத் தக்கதுதான்.

(கல்விக்காக 659 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கக் கூடியது என்றாலும், மாகாணமெங்கும் இலவச, கட்டாய, ஆரம்பக் கல்வியை ஏற்படுத்துவதற்கு மந்திரி சபை தவறியது மன்னிக்க முடியாத குற்றமென்றே கூறுவோம்.)

"மதஸ்தாபனங்களிடம்அதிகமாக மிஞ்சியிருக்கும் பணத்தைக்கொண்டுபுதியகல்விஸ்தாபனங்களை அமைப்பதற்கு மந்திரி சபை முயற்சித்து வருகிறது,' என்று தோழர் பிரகாசம் கூறியிருப்பது நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது. மதஸ்தாபனங்களின் செலவினங்களை அடியோடு நிறுத்தாவிட்டாலும், இப்போதுள்ள அளவில் பாதிக்கு மேலாகக் குறைத்து, மீதியாகும் பணத்தைக்கொண்டு கல்விக்கும் சுகாதாரத்திற்கும் செலவிடுவதற்கு மந்திரிசபையார் துணிவுபெறுவார்களேயானால், பொதுமக்களின் ஆதரவு அவர்களுக்குத் தாராளமாகக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

நீதி இலாகாவையும் நிர்வாக இலாகாவையும் பிரிப்பதற்கு 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது நாம் பல ஆண்டுகளாகக் கூறிவந்த இந்த முடிவைப் பூரிப்புடன் வரவேற்கின்றோம்.

இம்மாகாணத்திலேயே பல பொருள்களை உற்பத்திசெய்வதற்காக, கைத்தொழில் மூலதீட்டு ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தவும் மந்திரி சபையார் முடிவுசெய்திருப்பது போற்றக் கூடியது.

ஆனால், பூர்ண மதுவிலக்கை இந்த ஆண்டிலேயே ஏற்படுத்துவதற்குப் "பணம்" ஒன்றே காரணம் என்றுகூறப்படுவதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. கிராமச் சீர்திருத்தத் திட்டத்திற்கும் கதர்த் திட்டத்திற்கும் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது வீண் என்றே கூறுவோம். குடியை ஒழிப்பது ஒன்றே கிராமச் சீர்திருத்த வேலையின் முக்கிய பகுதியாகும் என்பதைத் தோழர் பிரகாசம் அறியமாட்டாரா? 'ஹரிஜனங்களுக்காக ஒரு கோடி ரூபாய்ஒதுக்கப்படுவதும்" வீண் விரயம் என்றே கூறுவோம். இது ஹரிஜன இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பொருள் உதவிசெய்வதாகத் தான் முடியப்போகிறது என்பதைஇப்போதே ஆருடம்கூறுகிறோம். குடிப்பவர்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட மக்களல்லவா? குடியை நிறுத்துவதற்கு இந்த ஒரு கோடி ரூபாயைச் செலவழித்தால் அவர்கள் முன்னேறமாட்டார்களா?)

(எனவே, இந்த 4 கோடி ரூபாயையும் குடி ஒழிப்புக்கு எடுத்துக் கொண்டிருக்கவேண்டும்.) மேலே கூறியபடி, தேவையான அளவுக்கு விற்பனை வரியை உயர்த்தியிருக்கவேண்டும். இத்துடன் இன்னும் சிறு தொகை தேவையிருந்தாலுங்கூட, கடன் பத்திரங்கள் மூலம் பொது மக்களிடம் கடன் வாங்கலாம். கடன் வாங்குவதற்கும் இதைவிட நல்ல வாய்ப்புக்கிடைக்காது என்பதை நிதி மந்திரியார் ஏன் உணரவில்லையோ?

இவ்வாறு செய்திருந்தால் பூர்ண மதுவிலக்கு ஏற்படுத்துவதற்கு இன்னும் மூன்றாண்டுத் தவணை தேவையில்லை. அது வரையில் தோழர் ஆச்சாரியாரவர்களுக்கும் ஓயாத பிரசாரக் கஷ்டம் இல்லாமல் தடுத்துச் சிறிது ஓய்வு கொடுத்திருக்கலாம்!

"இரண்டரை வருஷங்களில் ஸ்ரீ ஆச்சாரியார் நாலு ஜில்லாக்களில் மதுவிலக்குக் கொண்டுவந்தார். இரண்டரை வருஷங்களில் அவர் செய்ததை பிரகாசம் மந்திரி சபை முதல் ஆறு மாதத்திற்குள் செய்கிறது. ஸ்ரீ ஆச்சாரியின் ஆமைவேகத்தைவிட இது குறைந்துவிடவில்லை,"யென்று காங்கிரஸ் தினசரிப்பத்திரிகையொன்று எழுதியிருக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது

தோழர் ஆச்சாரியார் கூறுவதற்காக, அதைப் புறக்கணிப்பது என்றோ, அவர் கூறிவிட்டதனால் அதை ஏற்றுக்கொள்வது கௌரவக் குறைவு என்றோ பிரகாசம் மந்திரி சபை கருதியிருக்கக் கூடாது.

இப்போதும் காலங்கடந்துவிடவில்லை. முழு மதுவிலக்கு ஏற்படுவதனால், அடிதடி, களவு, கொலை முதலிய குற்றங்கள் குறையும். அதாவது, கோர்ட்,போலீஸ்முதலிய இதர இனங்களில் செலவு குறையும். ஆதலால் நாம் மேலே குறிப்பிட்டமுறைகளைக் கவனித்து, முழு மதுவிலக்கிற்கு ஏற்பாடு செய்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மொத்தத்தில் அட்வைஸர்கள் 'பட்ஜெட்' டைக்காட்டிலும், பிரகாசம் பட்ஜெட் அதிகப் பிரகாசம் பொருந்தியது என்பதை மறுக்கமுடியாது. ஆனாலும் 100க்கு 100 மார்க் வாங்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கலாம், நடுநிலைமையிலிருந்து தயாரித்திருந்தால். எனினும், கருமித்தனமில்லாமல் 'மார்க்' கொடுக்கக்கூடிய ஆசிரியர் எவரும், இந்த பட்ஜெட்டுக்கு 100க்கு 70 'மார்க்' கொடுக்கத் தயங்கமாட்டார்.

விசைங்கள், வெள்ளித் தோட்டாக்களை!

இந்திய அரசியல் வானத்தில் காண்கிறோம், இடியும், மின்னலும்! புறக்கணிக்கப்பட்ட பிரிவினர் எல்லோரும், போராட்டத்திற்கு ஆயத்தமாகின்றனர். வருங்காலம் நெருக்கடி மிகுந்தது. குறிப்பாக, திராவிடர் சமுதாயத்திற்கு இறுதியான சோதனை காலமாயிருக்கும். அதற்கேற்ற வாடை இப்போதே வீசுகிறது!

இதையறிந்தே பெரியாரவர்கள் புயற்காற்று வேகத்தில் பிரசாரத்திற்குப் புறப்பட்டிருக்கிறார். திராவிட மக்களை ஒன்று திரட்டுவது ஒன்றுதான், அவரால் இம் முதிர்ந்த வயதில் செய்யக்கூடிய தொண்டு. மற்றத்தொண்டுகளைக் கவனிக்க வேண்டியது, திராவிட இனத்தாரின் கடமையாகும். பிரசார பலத்தில் நம்மை மிஞ்சக்கூடியவர்கள் எவருமில்லை. ஆனால் வெறும் பிரசாரம் மட்டும் காரியசித்திக்குப் பயன்படுமா?

வரப்போகும் பெரும் போராட்டத்திற்கு, அதாவது திராவிட இனத்தின் தற்காப்பு முயற்சிக்கு, உடனடியாகத் தேவையாயிருப்பது, விமானமல்ல; வெடிகுண்டல்ல; துப்பாக்கியுமல்ல வேண்டியது, வெள்ளித் தோட்டாக்கள்! அதாவது நிதி! பெரியாரின் குறிக்கோள் 50,000 ரூபாயாயிருக்கலாம்! ஆனால் இந்த அற்பத் தொகையை எதிர்பார்த்ததற்கு அவர் நாணும்படியாக, குறைந்தது இரண்டு லட்ச ரூபாயாவது நிதி திரட்ட வேண்டும் என்பதை நம் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிதியைப்போலவே உடனடியாக, ஒரு லட்சம் அங்கத்தினரையாவது நம் கழகத்தில் புதிதாகச்சேர்க்கவேண்டும் என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு காரியங்களுக்கும், இன்று முதல் இரண்டு மாதத் தவணைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது, தலைவர் அவர்களால். கஸ்தூரிபா நிதிக்கும் இதர வடநாட்டு நிதிகளுக்கும் பல லட்சக்கணக்கில் கொடுத்தார்கள், காங்கிரஸ்காரர். அவர்கள் மட்டுமா? காங்கிரஸின் காலடிச் சுவட்டைக் கண்டிராதவர்கள் கூட!

எனவே, ஒரு லட்ச அங்கத்தினர்; இரண்டு லட்ச ரூபாய்; இரண்டே மாதம்— இவைகளைத் தவிர இது சம

காங்கிரஸ் மந்திரி சபை

1946 - 47 வரவு செலவுத் திட்டம்

3 - ஆண்டுகளில் முழு மதுவிலக்காம்

	பட்ஜெட் மதிப்பு 1945—46	பூர்வாங்க கணக்கு 1945—46	பட்ஜெட் மதிப்பு 1946—47
	(ரூபாய்கள் ஆயிரக்கணக்கில்)		
1. வரவு	41,2529	47 8640	57,4292
2. செலவு	40,4514	47,8585	57,4277
3. உபரி	80,15	55	15

சென்னை, ஜூலை 31

முதன் மந்திரி தோழர் டி. பிரகாசம் இன்று வரவு செலவு (பட்ஜட்) திட்டங் குறித்து பேசுகையில் மதுவிலக்கைப் பற்றியும் அரசிப் பங்கிட்டைப் பற்றியும் சிறப்பாகக் குறிப்பிட்டார். பிரதமர் கூறியதாவது:—

மூன்றாண்டு காலத்தில் மாகாணமெங்கிலும் மதுவிலக்குக் கொண்டு வரப்படும் வியாபார வரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தொகையனைத்தும் மதுவிலக்குக் கொண்டுவருவதாலேற்படும் நஷ்டத்தை நிறைவு செய்யவே பயன்படுத்திக் கொள்ளப்படும்

பட்ஜெட்டின் முக்கிய அம்சங்களாக பிரதமர் மேலும் எடுத்துக் கூறியதாவது:—

நாட்டிலே கதர் உற்பத்தியை அதிகப்படுத்த ரூ. 3 கோடியும், தாழ்தப்பட்டோர் முன்னேற்றத்துக்கு ரூ. 1 கோடியும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லீம் பெண்களுக்கென சென்னை நகரில் சர்க்கார் கல்லூரியொன்று துவக்கப்பெறும் மதுரையிலும் குண்டூரிலும் மருத்துவக் கல்லூரிகள் ஏற்படும் கோவை முதல் தரமான கல்லூரி பொன்றைப்பெறுகிறது. கட்டாய தொடக்கக் கல்விக்கு ஆதரவும், 4,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சியும், அளிக்கப் படுவதோடு, ஆசிரியர்களின் பஞ்சப்படி ரூ. 16 ஆக உயர்த்தப்படும் சர்க்கார் உதவிப் பள்ளியாசிரியர்களுக்கு ரூ. 2 வீதம் கிராண்ட் உயர்த்தப்படும் அண்ணாமலை, ஆந்திர பல்கலைக் கழகத்துக்கு அதிக கிராண்ட் அளிக்கப்படும். காகிநாடா, அனந்தப்பூர் ஆகிய இடங்களில் என்ஜினியரிங் கல்லூரிகள் அமையும், இந்து அறநிலைப் பாதுகாப்பு நிலையங்களுக்குரிய நிதிகளின் ஒரு பகுதி கல்விக்காக செலவிடப்படும்.

நீதி, நிர்வாக இலாகா பிரிவினைக்கு ரூ. 2 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மாகாண சப்-ஜெயில்களின் அபிவிருத்திக்கும் ரூ. லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

முழு மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முற்படியாக அக்டோபர் முதல் தேதியிலிருந்து சேலம், வடாற்காடு, சித்தூர், கடப்பை ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மதுவிலக்கை சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவந்துள்ளனர்.

வருமானத் தொகை விவரங்கள்

1946-47-ல் எதிர்பார்த்த மொத்த வருமானம் நிதி ரிசர்வதொகை நீங்கலாக 1945-46 கணக்கைவிட ரூ. 62-52 லட்சம் அதிகமாகும். 1945—46—ல் போர்ப்பிற்கால செலவுக்காகவும், 1946-47-ல் ஏற்படும் செலவுக்காகவும் முன்பணம் கொடுப்பதாக இந்திய சர்க்கார் தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக ஆண்டு செலவு திட்டத்தில் ரூ. 448 லட்சம் வருமானத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சர்சார்ஜையும் வருமான வரியையும் ஒன்றாய்சேர்ப்பதில் 1945-46-ல் கிடைத்ததைவிட 1946—47-ல் ரூ. 54·60 லட்சம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்கு ஜில்லாக்களில் மதுவிலக்குக் கொண்டு வருவதால் ரூ. 115 லட்சம் வருமானத்தில் துண்டு விழுமென்று தெரிகிறது.

செலவு விவரம்

சர்க்கார் வரவு செலவு திட்டத்தில் ரூ. 5742·77 லடசம் செலவு கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கணக்கைவிட ரூ 2706·92 லட்சம் செலவு அதிகமாகிறது. இந்த ரூ. 2707 லட்சத்திலிருந்து சர்க்கார் வர்த்தகத் திட்டத்துக்கு ரூ. 918 லட்சம் கிடைக்கவேண்டியதாயிருக்கிறது.

ஏழை குழந்தைகளுக்கும் கர்ப்ப மாதர்களுக்கும் இலவசமாக பால் கொடுப்பதாலும் உணவு பொருள் வாங்குவதாலும் பங்கிடு முறையிலும் ரூ. 280 லட்சம் அதிக செலவு ஏற்படுகிறது, கிராம சிரமைப்புக்கும் தாழ்த்பட்டோர் முன்னேற்றத்திற்கும் ரூ. 400 லட்சம் செலவு செய்யப்படும். ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து ரோடுகளை எடுத்துக் கொள்வதாலும் ஷை இலாகாவை அமைப்பதாலும் போர்ப் பிற்கால திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதாலும் ரூ. 374 லட்சம் அதிக செலவாகிறது. உதவி பெரும் பள்ளிக்கூட மானேஜ்மெண்டுகளுக்கு அதிக கிராண்டுகள் கொடுப்பதாலும் பஞ்சப்படி கொடுப்பதாலும் அதை குழந்தைகளுக்கு இடைவேளை உணவு கொடுப்பதாலும் 4000 ஆசிரியர்களுக்கு பயிர்சி அளிப்பதாலும் ரூ. 199 லட்சம் அதிக செலவு உண்டாகிறது. பஞ்ச நிவாரணத்திற்கு ரூ. 101 லட்சம் செலவாகும். நீர்ப்பாசனம், போலீஸ், பொது சுகாதாரம் விவசாயம், கைத்தொழில் திட்டங்களுக்கும் அதிக் செலவு ஏற்பட்டிருக்கிறது. ரெவினியூ கணக்கு நீங்கலாக பெரிய இனங்களுக்கு செலவு ரூ. 429·84 லட்சம் 1945-46 பூர்வாங்க கணக்கில் ரூ, 87-76 லட்சம்தான் மதிப்பிடப்பட்டது. துங்கபத்திரா திட்டம், பல மின்சார திட்டங்கள் முதலியவைகள் இந்த அதிக செல்வு காரணமாகும்.

பணம் சௌகரியமாய் கிடைத்தால் கடன் வாங்குவது உசிதமான காரியம். அதைக்கொண்டு பெரிய திட்டங்களுக்கும் கடன் கொடுப்பதற்கும் செலவழிக்கலாம். அபிவிருத்திக்காக பெருவாரியாக கடன்வாங்க வேண்டிய அவசியம் ஏற்படப்போகிறது. ஆரம்பத்திலிருக்கும் உரிமையையும் வருமானம் செலவு முதலியவைகளையும் கணக்குப்பார்த்தால் வரவு செலவு திட்டம் ரூ. 50.91 லட்ச மிச்சத்தோடு முடியுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இருப்பு நிதியிலிருந்து எடுக்க முடிவு

சமீப காலத்தில் ரெவினியூ கணக்கில் ஏராளமான மிச்சம் இருந்தது. போர்ப்பிற்காலத் திட்டங்களுக்காக செலவழிக்கவும் ரெவினியு பற்றாக் குறையை பூர்த்தி செய்யவும் இந்த மிச்சம் ரெவினியு ரிசர்வ் நிதிக்கு மாற்றப்பட்டு வந்தது. 1946 ஏப்ரல் 1-ந் தேதி இந்த நிதியில் ரூ. 3140 லட்சம் இருந்தது. வரவுசெலவு திட்டத்தை சரிப்படுத்தவும் உணவுப்பொருள் செலவை சமாளிக்கவும் கிராம சிரமைப்பு தாழ்த்தப்பட்சோர் முன்னேற்றத்திற்காகவும், 4கோடி ஒதுக்கி வைக்கவும், இன்னும் மற்றபோர்ப்பிற்கால புனருத்தாரண திட்டங்களை நிறுவவும் ரெவினியு ரிசர்வ் நிதியிலிருந்து ரூ. 894 லட்சத்தை எடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

கல்வி

இந்துஸ்தானி தலிமி சங்கம் அளித்துவரும் முறையில் அடிப்படைக் கல்வி வழங்கப்படும். அம்முறைகளிலேயே பள்ளிகளும், ஆசிரியப்பயிற்சி தரும் பள்ளிகளும் திருத்தியமைக்கப்படும். காலப்போக்கில் மாணவர் எல்லோரும் பள்ளியிறுதி வகுப்பை முடித்துக்கொண்டு கல்லூரிகளுக்கு அர்த்தமில்லாமல் செல்வதைத்தடுத்து தொழில் முறைகளில் அவர்களைத் திருப்பவேண்டும். இப்பொழுது பெரும்பாலான மக்கள் செய்துவரும் வேலைகளுக்கு கல்லூரிக் கல்வி அவசியமில்லாததேயாகும். ஆகவே கல்வி முறையைத் திருத்தியமைக்க சர்க்கார் எண்ணியுள்ளது. அப்படி திருத்தியமைக்கையில், மண்டலத் தாய்மொழிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

யம் நம் தோழர்களுக்கு வேறு நினைவே இருக்ககூடாது என வேண்டிக்கொள்கிறோம்.

நமது மகாநாடுகளையும் பொதுக்கூட்டங்களையும் இத் தொண்டிற்குப் பயன்படுத்திக் கொள்வதே சிறந்த முறையாகும்.

இது பற்றித் திராவிடர் கழகச் செயலாளர் விடுத்துள்ள வேண்டுகோளை இன்று மற்றோரிடத்தில் காணலாம்.

இன்னும் அறுபதே நாட்கள்தான் இருக்கின்றன என்பதை மறக்காமல், நமது தற்காப்பு ஆயுதச் சேகரிப்பு வேலையை, நாளையே தொடங்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

நம் வலுவையும், கட்டுப்பாட்டையும், ஐக்கியத்தையும், உணர்ச்சியையும், செயலாற்றும் திறனையும் நம் எதிரிகள் கண்டு நடுங்குவதற்கு இதோ, ஒரு நல்ல வாய்ப்புக்கிடைத்திருக்கிறது! இதை வீணாக்கலாமா?

★★★★★-★★★★★★★-★★★

திராவிடர்கழக நிதி

23—6—46 ல் நடைபெற்ற திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் தீர்மானித்தபடி கீழ்க்கண்டவாறு ஜில்லாக்களுக்கு திராவிடர்கழக நிதி டிக்கட்டுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தந்த ஜில்லாவிலுள்ள திராவிடர் கழக நிர்வாகஸ்தர்களும், தோழர்களும் கீழேகுறிப்பிட்டுள்ள அந்தந்த ஜில்லாநிதிக்கமிட்டித் தலைவர்களுக்கு, விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்வதோடு வசூலைத் துரிதமாகக் கவனிக்கும்படி கோருகிறேன்.

சென்னை :
தோழர். சி. டி. டி. அரசு,
11, பொம்முசெட்டித் தெரு,
பி. டி. சென்னை.

தென்னாற்காடு :
சி. முனுசாமி,
எம். ஆர். தாஸ் அண்டு கோ.,
சைகிள் கம்பனி, விருத்தாசலம்.

வடஆற்காடு :
இ. திருநாவுக்கரசு,
4, ஆகாபசார், வேலூர்
வடாற்காடு.

தஞ்சாவூர் :
வி. சின்னதம்பி,
மிராசுதார், கும்பகோணம்,

திருச்சி :
தி. பொ. வேதாசலம்,
வக்கில், தென்னூர், திருச்சி.

ராமநாதபுரம் :
1. காரைக்குடி
இராமசுப்பையா,
சமதர்ம விலாஸ்,
முத்துப்பட்டணம், காரைக்குடி,
2. அருப்புக்கோட்டை :
எஸ் எஸ். பழனிசாமி,
திராவிடர் கழகம்,
அருப்புக்கோட்டை.

சேலம் :
ஜி பி. சோமசுந்தரம்,
மிட்டாதார், வேளுக்குறிச்சி.

கோவை :
என். அர்ச்சுனன்,
இளைய பட்டக்காரர்,
பழையக்கோட்டை,
ஈரோடு.

மதுரை, செங்கல்பட்டு திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

செப்டம்பர் முடிவுக்குள் ரூ. 50,000 மும் வசூலித்தாக வேண்டு மாதலால் தோழர்கள் அனைவரும் அயராது முயன்று ஆவன செய்ய வேண்டுகிறேன்.

என். அர்ச்சுனன்,
தலைவர்,
திராவிடர் கழக நிதிக்கமிட்டி,
தலைமை நிலையம், சென்னை,

★★★★★★★-★★★-★★★★★

பாரதிதாசன் சரித்திர வெண்பா

101 சுவையுள்ள வெண்பாக்கள் கொண்ட நல்ல தமிழ் நூல். கவிஞரின் செயல்-குணச்சித்திரம். விலை அணா 4.

கவிஞர் உருவப்படம்

வெள்ளி வண்ணத்தாளில் பதித்த, இயற்கை நிறமுள்ள அழகிய புதிய கலர்ப் படம். விலை அணா 4.

மொத்த வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன்.
தபால் செலவு பிரத்தியேகம்.

குயில் நிலையம்.
581, பைக்கிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

காங்கிரஸ் மந்திரிசபை

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

அதிகப்படியான மருத்துவக் கல்லூரிகள், விடுதிகள்:-

மதுரையிலும் குண்டூரிலும் இரண்டு சர்க்கார் மருத்துவக் கல்லூரிகளை இவ்வாண்டிலிருந்தே துவக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 1946—47-ல் 200 நர்சுகள் வரை தேர்ச்சியளிக்கப்படுவார்கள் பல திறப்பட்ட மாவட்டங்களிலும் சுமார் 200 மருத்துவ விடுதிகள் வரை தோற்றுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மருத்துவ விடுதியிலும் 20 படுக்கைகள் அமைக்கப்படும். ஆயுர்வேதம், சித்தர், யூனானி,ஹோமோபதி ஆகிய மருத்துவ முறைகளையும் அபிவிருத்தி செய்ய சர்க்கார் எண்ணியுள்ளனர். இம்முறைகளில் கல்வியளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 5 லட்சம் வரை இவைகளுக்கு செல்விடவும் எண்ணியுள்ளனர்.

நீர்வசதி, வீட்டமைப்பு:-

கிராமாந்திரங்களில் தண்ணீர் சப்ளையை அபிவிருத்தி செய்யவும் அதனாலேற்படும் செலவை சமாளிக்கவும் ரூ. 30 லட்சம் வரை அதிகப்படியாக ஒதுக்குவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது முனசிபல் தண்ணீர் சப்ளை, சாக்கடைத் திட்டங்கள் ஆகியவற்றைத் தவிரவும் இன்னும் சில முக்கியமான திட்டங்கள் சர்க்கார் கவனத்திலிருந்து வருகின்றன. அவைகளும் இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்படும்.

மாகாணத்திலிருந்து வரும் வீட்டு வசதிநெருக்கடியைப் போக்க சர்க்கார் தீவிரமாகமுயன்றுவருகிறார்கள். வீட்டு வாடகைக் கட்டுப்பாடு உத்தரவை தொடர்ந்து அமுலில்வைத்துவரவும் சட்டமியற்றலாமென எண்ணியுள்ளனர்.

நீர்ப்பாசன வேலைகள்

தற்போது இருந்துவரும் உணவு நெருக்கடியை உத்தேசித்து நீர்ப்பாசன வேலைகளுக்கும், உற்பத்தித் திட்டங்களுக்கும் பெருந்தொகையை செலவிட சர்க்கார் எண்ணியுள்ளனர். சில்லறை நீர்ப்பாசன வேலைகளுக்கும் மீறைந்த கவனம் செலுத்தப்படும்- நீர்ப்பாசன வாய்க்கால்கள் திருத்தியமைக்கப்படும் துங்கபத்திரா,மசசகுண்டுநீர்த்தேக்கங்களின் சக்தி பெருக்கப்படும். சர்க்காரின் நீர்ப்பாசனக் கொள்கையினையே பரிசிலனை செய்து திருத்தியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்தல ஸ்தாபனங்கள்

ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்களை அதிகப்படுத்த சர்க்கார் தீர்மானித்துள்ளனர். நாட்டுப்புறங்களின் தேவைகளை யறிந்து, போதுமான வசதிகளை செய்வதற்கே இப்படி அவைகளின் அதிகாரங்கள் விஸ்தரிக்கப்படுகின்றன. கிராமக் காரியங்களை நிர்வாகம் செய்யவும், கிராமங்கள் தனிப்பட்ட முறையில் நிகழவும் கூடிய வகையில் பஞ்சாயத்து முறை திருத்தியமைக்கப்படும்,

பஞ்சநிவாரணம்

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட ஜில்லாக்களிலுள்ள மக்களுக்கு வேலை தரும் பொருட்டு, பொது மராமத்து இலாகா, ஜில்லாபோர்டு ஆகியவைகளின் வேலைகளை அதிகப்படுத்த சர்க்கார் முடிவு செய்தனர். அனந்தப்பூரில் 155 வேலைகளும் பல்லாரியில் 64 வேலைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. கால் நடைத் தீனிகள் நெருக்கடியைப் போக்கவும் தீனி டெப்போக்கள் ஆங்காங்கு திறக்கப்பட்டுள்ளன. பஞ்சத்தால் வாடும் கிராமவாசிகளுக்கு சகாயத் தொகைகளும், உணவு தானியங்களும் வழங்கப்பட்டுள்ளன. பஞ்சத்தால் பாதிப்புண்ட பகுதிகளுக்கு நிலவரியும் குறைக்கப்பட்டுள்ளது. பஞ்ச நிவாரணை வேலைகளுக்கெனவே ரூ. 145 லட்சம் வரை செலவு செய்ய பட்ஜட்டில் இடமளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் பலவற்றுக்கு சர்க்கார் ஏற்கெனவே அனுமதித்துள்ளனர். இன்னும் சில திட்டங்கள் சர்க்காரின் ஆலோசனையிலிருந்து வருகின்றன. போர்ப் பிற்காலத்திட்டங்களுக்கு ரூ, 1133-41 லட்சம் செலவிடுவதென தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சர்க்கார் கீழ்த்தர ஊழியர்களுடையவும், ஸ்தலஸ்தாபன ஊழியர்களுடையவும் சம்பளத்தை ஓரளவு அதிகப்படுத்த சர்க்கார் கவனமாக ஆலோசித்து வருகின்றனர், கிராம அதிகாரிகளின் கோரிக்கைகள் பற்றியும் விரைவில் உத்தரவு பிறபிக்க சர்க்கார் எண்ணியுள்ளனர்.

எஸ்டேட் நிலசட்டத்தையும், மலையாள குடிவார சட்டத்தையும் விரைவில் திருத்தியமைக்க சர்க்கார் கருதியுள்ளனர்.

தாழ்த்தப்பட்டோர் அணிவகுப்பு ஊர்வலம்

தாழ்த்தப் பட்டோர் சம்மேளனத்தைச் சேர்ந்த 45 தொண்டர்கள்வரை இன்று போலீசாரால் கைது செய்யப்பட்டனர்-

மேற்படிதொண்டர்கள் அணிவகுத்து ஊர்வலமாக நகரத்தின் பல பகுதிகளிலும் சுலோகங்களைக் கூறிக்கொண்டு வந்தனர். இடையிடையே கதர்க்குல்லாயணிந்த காங்கிரஸ்காரர்களோடு தகராறுகள் நேரிட்டனவென்று தெரிகிறது. கைதுசெய்யப்பட்ட 45 பேர்களும் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

பட்டந் துறந்தனர்

பம்பாயிலிருந்து இன்று கராச்சி திரும்பிய உள் நாட்டு இலாகா மந்திரி தோழர் குலாம் அலிகான்தால்பூர் தனது "கான்பகதூர்" பட்டத்தைத் துறந்தார்.

மத்திய மாகாண எம் எல் ஏ வாகிய மகமது அப்துர் ரஹமான் கானும் தனது "கான் பகதூர்" பட்டத்தைத் துறந்தார்.

திராவிடர் கழகத் தோழர்களுக்கு

இவ்வாண்டு தொடக்கத்தி லிருந்து அங்கத்தினர் சேர்க்கும் இரசீது புத்தகங்கள் சுமார் 2000 க்கு மேல் இதுவரை அனுப்பப்பட்டுள்ளன. இதில் இருபதில் ஒரு பாகங்கூட இன்னும் சேர்த்தனுப்பப்பட வில்லை. ஆர்வத்துடன் எழுதிக்கேட்டு இரசிது புத்தகங்களைப் பெற்றது தவிர ஊக்கத்தோடு அதைக் கவனிக்கவில்லை. இலட்சம் அங்கத்தினர்கள் சேர்த்தாக வேண்டுமென்று பலமுறை வேண்டிக்கொண்டும் இன்னும் ஐம்பதினாயிரத்திலேயே எண்ணிக்கை இருக்கிறது.

மாநாடுகளும் கூட்டங்களும் மட்டும் அதிகப்படியாகவே நடத்திவருகிறோம் இதனால் ஏதேனும் பயன் ஏற்பட்டதென்றால் அங்கத்தினர் சேர்த்த தொகை அதிகப்பட்டிருக்க வேண்டும். கழக நிர்வாகஸ்தர்களும், பிற தோழர்களும் சிறிது கவலை எடுத்துக்கொண்டிருப்பின் இலட்சம் அங்கத்தினர்களைச் சேர்ப்பது இவ்வளவு பின்னடைந்திருக்காது. இதன்றியும் திராவிடர் கழக நிதி சேர்க்க ஜில்லா தோறும் டிக்கட்டுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவின் வசூல் பொறுப்பு விவரம் வேறு இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் முடிவுக்குள் 50,000 ரூபாயும் வசூலித்தாகவேண்டும்.

ஆகஸ்டு, செப்டம்பர் இந்த இரண்டு மாதங்களில் நிதி ரூபாய் 50,000 மும், அங்கத்தினர்கள் இன்னும் 50,000 பேம் சேர்த்தாகவேண்டியது ஆங்காங்குள்ள கழக நிர்வாகஸ்தர்களின் பொறுப்பு ஆகும். இயக்கத் தோழர்களும் கழக நிர்வாகஸ்தர்களோடு ஒத்துழைத்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம்,
தலைமை நிலையம், சென்னை.

தபால்காரர் வேலை நிறுத்தம்

சமரச முயற்சி

பம்பாய். ஜூலை. 30—

தபால் இலாகா டைரெக்டர் ஜெனரலும், தோழர் டால்வியும் தபால் வேலை நிறுத்தத்தைப்பற்றிப் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வருவதற்காக இன்று கூடிப்பேசுவர்கள். ஆரம்பச்சம்பளத்தை அதிகப்படுத்தும் விஷயமும், வேலைநேர விஷயமும் தான் இரு முக்கிய பிரச்னைகள் என்றும், மற்றவை எளிதில் தீர்க்கப்பட்டுவிடும் என்றும், தோழர் டால்வி கூறினார்.

சென்னை வட்டாரத்தில் : தபால் வேலைநிறுத்த நிலைமை

சென்னை வட்டாரத்தில் தபால் வேலைநிறுத்த நிலவரம் நேற்றிருந்தது போலவே தான் இருக்கிறது. மேற்கொண்டு எவரும் வேலைநிறுத்தம் செய்ததாக எந்தக் காரியாலயத்திலிருந்தும் தகவல் வரவில்லை.

கோதாவரி தபால் பகுதியில் வேலை நிறுத்தம் செய்திருந்தவர்களில் மேற்கொண்டு நான்கு பேர்கள் வேலைக்குத் திரும்பியிருக்கின்றனர். இத்துடன் வேலைக்குத் திரும்பிவிட்ட வேலை நிறுத்தக்காரர்களின் தொகை 251 ஆகிறது.

சென்னை நகரத்தில் நிலைமை திருப்திகரமாகவே இருந்துகொண்டு வருகிறது. இன்றிலிருந்து ஜார்ஜ்டவுன் பிரதேசத்தில் வீட்டுக்கு விடு தபால் பட்டுவாடா மீண்டும் தொடங்குகிறது. வெளியூர்களில் உள்ள பல இடங்களிலும் நிலைமை மிகவும் திருப்திகரமாகவே இருந்துகொண்டு வருகிறது.

3057 ஊழியர்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்டிருக்கிறார்கள், இவர்கள் இந்த வட்டாரத்தில் வேலைநிறுத்தம் எந்தப் பிரிவுகளைச்சேர்ந்த ஊழியர்களிடையே பரவியிருக்கிறதோ, அத்தகைய ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையில் 30. 2 சதவீதம் பேர்தான். வேலைநிறுத்தத்தால் மொத்தம் 194 தபால் காரியாலயங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது இந்த வட்டாரத்தில் உள்ள காரியாலயங்களின் மொத்த எண்ணிக்கையில் 3. 6 சதவீதம் தான்.

டாக்டர் எம். ஆர். ஜெயக்கர்

டாக்டர் எம். ஆர். ஜெயக்கர் ஜூலை 31-ந்தேதியன்று லண்டனை விட்டுப் புறப்பட்டுவிட்டார். பம்பாயிலிருந்து இவர் அரசியல் நிர்ணய சபைக்கு ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இவருக்காக காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் விலகிக்கொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

திருத்துறைப்பூண்டி—3-8-46ல் பெரியாரும் நெடுஞ்செழியனும் இவ்வூருக்கு வருவதால் அதுபோழ்து வரவேற்பளிப்பதெனவும், இயக்கக்கொடி ஏற்றுவதெனவும், தீர்மானிக்கப்பட்டது. உயர்நிலைப்பள்ளிக்குப்பின் இருக்கும்மருத்துவர் தெருவில் திராவிட மருத்துவர்கள் சார்பில் வரவேற்பும் இயக்கக் கொடியும் ஏற்றுவிக்கப்படும். வெளியூர்த் தோழர்களுக்குத் தனித்தனியே அழைப்பு அனுப்ப இயலாமையால் இதனையே அழைப்பாக ஏற்றுவருமாறு வேண்டுகிறோம் எனத் தோழர் இராசப்பன் (செயலாளர்எழுதுகிறார்.

வட சென்னை திராவிடர் கழகம்:—இக்கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் 2—8—'46 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு வண்ணையம்பதி, மாடசாமி நாடார் தெருவிலுள்ள "வட சென்னை திராவிடர் கழக" மைதானத்தில் நடைபெறும். அவ்வமயம் சில முக்கியமான விஷயங்கள் ஆலோசிக்கப்படும். விசேஷ அழைப்பாளர்கள் தவறாமல் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,

பெரியார் சுற்றுப்பிரயாணம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 2—8—46 ம் நாள் காலை 8-மணிக்குக் காரைக்கால் திராவிடர் கழகத் திறப்புவிழா வாற்ற காரைக்கால் செல்லுவார். அன்று மாலையில் பேரளத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், கலந்துகொள்ள நடுப்பகலில் பேரளம் திரும்புவார். என்று வி. எஸ். பி. யாகூப் அறிவிக்கிறார்.

ஆசிரியருக்குக் கடிதம்

பெரியார் எதை எதிர்த்தார்?

17—7—46-ல் வெளி வந்த "ஜன சக்தி," யில் 'தாய்மொழியில் பாட போதனை' என்ற தலைப்பில் தோழா எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய கட்டுரையைக் கூர்ந்து கவனித்தேன். அவற்றில் முதலாவது கலத்தில், ஆறாவது பாராவில், பத்தாவது வரியில் "காந்திஜி, ராஜாஜி முதலிய தலைவர்களின் ஆதரவையும், சர்.எஸ். ராதாகிருஷ்ணன் போன்ற பேறிஞர்களின் ஆதரவையும் எடுத்துக்காட்டியது. ஆனால் பொறுப்பற்ற சர்க்கார் பொதுஜன அபிப்பிராயத்தை மதிக்க மறுத்தது. விசித்திரமென்னவென்றால், திராவிட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லும் ஈ. வெ, ரா. வும் எதிர்த்தார் !" என்று இருந்ததைப் பன்முறையும் படித்துப் பார்த்தேன். திராவிடர்களின் எதிரியாக தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் தம் சர்வாதிகாரப் பிடிப்புடன் 1938-ல் இந்திப் படிப்புத் திட்டத்தைத் தமிழ்நாட்டில் தமிழர்களிடம் புகுத்திய கொடுஞ்செயலைப் பெரியார் ஈ.வெ.ரா. மட்டுமல்ல ; எத்தனையோ தமிழ்ப் பேரறிஞர்களும், தமிழ் வீரத் தாய்மார்களும், எதிர்த்துச் சிறைசென்றனர். தாலமுத்து, நடராசன் போன்ற தமிழ் வீரர்களையும் பலிகொடுத்து, கட்டாய இந்தியை வீழ்த்தினர். தமிழ் நாட்டில் தமிழ் மாணவர்களுக்கு தாய் மொழியாகிய தமிழ்மொழி போதிப்புத் திட்டத்தைத் தோழர் ஆச்சாரியார் கொண்டு வந்தாரா? அப்படிக்கொண்டு வந்த தமிழ்க்கல்வி போதிப்பை எதிர்த்தாரா பெரியார் ஈ. வே. ரா. என்று தோழர் எஸ். ராமகிருஷ்ணன் அவர்களைக் கேட்கிறேன். "தன்நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்" என்னும் திருவள்ளுவர் திருமொழிக்கிலக்காகி கட்சியின் காரணமாக, கொள்கையின் நிமித்தமாக, வாயில் வந்தவைகளைப் பேசுவதும், நெஞ்சில் தோன்றியவற்றை வரைவதுமான செய்கையை விட்டொழித்து நீதியும், நேர்மையும் அடிப்படையாகக் கொண்ட நற்செயல்களில் ஈடுபட்டு தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் நன்மை பயக்கும் முறையில் தொண்டாற்ற இனிமேலாகிலும் முற்படும்படி தோழர் எஸ். ராமகிருஷ்ணன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஈரோடு,
19—7—46. } நா. வீராச்சாமி.

தங்கம்—வெள்ளி விலை

சென்னை, ஜூலை, 31—

பம்பாய் ஆலைத்தங்கம்	ரூ.	97	0	0
சவரன்	ரூ.	65	8	0
வெள்ளி ரூ. 100 எடை	ரூ.	166	0	0
வெள்ளி ரூபா 1 எடை	ரூ.	1	11	0

Edited, Printed and Published by K. A. MANI at the Dravidan Press, No. 2, Balakrishna Pillai St, Chintadripet MADRAS.